விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி

## Valampurii

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 27 ஞாயிற்றுக்கிழமை (11.03.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 82

## புதிய அரசாங்கம் விரைவில் உருவாகும் அதில் மங்கள மன்னராகச் செயற்படுவார்



### சிறிபதி சூரியாராட்சி எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

பாரிய வேலைத் திட்டங்களைக் கொண்ட அரசாங்கம் ஒன்று விரைவில் உருவாகும். அதில் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர மன்னரைப் போல் செயற்படுவார் என சிறிபதி சூரியாராட்சி எம்.பி.தெரிவித்துள்ளார்.

சிரிபத்கொடப் பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நாட்டில் அபிவிருத்தியை (04 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவின் மகன் தலைமையில் தகவல் தொழில்நுட்பப் பிரிவு ஆரம்பம்

### கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது மகன் சாள்ஸ் அன்ரனி தலைமையில் தகவல் தொழில்நுட்பத் துறையை ஆரம்பித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

பிரித்தானியாவில் விமானப் பொறியியல் துறைப் பட்டப்படிப்பை நிறைவு செய்த சாள்ஸ் அன்ரனி ஆறு மாதங்களுக்கு முன்னர் கிளிநொச்சிக்குத் திரும்பியுள்ளார்.

அதன் பின்னர் (04 ஆம் பக்கம் பார்க்க)

# அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் எவ்வித ஒப்பந்தமும் ஏற்படுத்தப்படவில்லை

## மீண்டும் அடித்துக் கூறுகின்றார் ஜனாதிபதி



(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எவ்வித ஒப்பந்தமும் ஏற்படுத்தப்படவில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

சிலர் அரசாங்கத்தை தாழ்வுபடுத்தி அசெளகரியங்களுக்கு உள்ளாக்க முயல்வதாகவும் ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று புத்திஜீவிகளுடனான சந்திப்பின் போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்று 2-வது நாளாகவும் மோதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் புல்லுமலையில் இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை நேற்றும் தொடர்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு அம்பாறை எல்லையில் 36 ஆம் கொலனியிலிருந்து தாண்டியடி நோக்கி படையினர் மேற்கொண்ட நகர்வு ஒன்று நேற்று முறியடிக்கப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது நல்லதண்ணியோடை, அடைச்சல், வாதக்கல்மடு ஆகிய பகுதிகளுக்கு நகர்ந்த (04 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் குறித்து நேற்றுக் கூட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்றம் செய்வது குறித்து பாதுகாப்புத் துறை ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

அப்பகுதியில் பல்வேறு அடிப்படை வசதிகளை அமைப்பது குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக மீள் குடியேற்ற அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் அகதிகளுக்குத் தேவைப் படும் வசதிகளைச் செய்து தருவதற்காக தான் நிதி ஒதுக்கி (04 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை சுட்டதில் தமிழக மீனவர் பலி

இலங்கைக் கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர் ஒருவர் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை இடம் பெற்றுள்ளதாகத் தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

இச் சம்பவத்தினையடுத்து தமிழக மீனவர்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சி இன்னும் 15 மாதம் மட்டுமே

### ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு இருப்பது இன்னும் 15 மாத ஆயுட் காலமே என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இக் காலப் பகுதிக்குள் ஜே.வி.பி. மறுசீரமைக்கப்பட்டு அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். களுத்துறையில் அண்மையில் நடைபெற்ற ஜே.வி .பியின் அதிகார சபைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தற்போது கூட்டமைப்பு அரசாங்கம் நாட்டில் இல்லை. மகிந்த ராஜபக்ஷவை பதவியில் அமர்த்தப் பாடுபட்ட ஜே.வி.பி. இவரை அதிலிருந்து அகற்றவும் நடவடிக்கை எடுக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்அதிகார சபைக் (04 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடைச் சிறைக் கைதிகள் 42 பேர் உண்ணாவிரதம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறையில் உள்ள 42 தமிழ்க் கைதிகள் நேற்றுக் காலை முதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

விசாரணைகளைத் துரிதமாக நடத்தித் தம்மை விடுதலை செய்ய வேண்டுமெனவும் தம் மீதான விசாரணைகள் தாம் கைது செய்யப்பட்ட மாவட்டத்திலேயே நடத்தப்பட வேண்டும் என்ற இரு கோரிக்கைகள் இவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் தம்மீதான விசாரணைகள் நடத்தப்படும்போது சாட்சிகள் கொழும்புக்கு (04 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பிலிருந்து இரு நாள்களில் நாற்பதாயிரம் மக்கள் இடம்பெயர்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான படுவான்கரை நோக்கிப் படையினரால் நடத்தப்படும் பீரங்கி மற்றும் பல்குழல் எறிகணை வீச்சுக்களால் 48 மணிநேரத்தில் கொக்கட்டிச்சோலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலிருந்து 40 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துலக சமூகத்தின் கவனத்தைப் பெறாது மற்றுமொரு மனித அவலத்தை மட்டக்களப்புச் சந்தித்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி (04 ஆம் பக்கம் பார்க்க)

# வலது குறைந்த குடும்பத் தலைவரை கொண்ட குடும்பங்களுக்கு கொடுப்பனவு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவிப்பு

வலது குறைந்த நிலையிலுள்ள குடும்பத் தலைவர்களை கொண்ட குடும்பங்களுக்கு மகிந்த சிந்தனையின் கீழ் 3 ஆயிரம் ரூபா மாதாந்த கொடுப்பனவை வழங்குவதற்கான நடவடிக்கை இம் மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம் பெற்ற வலது குறைந்தோர்களுக்கான தேசிய அமைப்பின் உறுப்பினர்களது மாதாந்த கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானங்களை ஈட்டுகின்ற குடும்பத்தலைவர் வலது குறைந்த நிலையில் உள்ள குடும்பங்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என மகிந்த சிந்தனையின் கீழ் வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளமைக்கு இணங்க வலது குறைந்தவர்களுக்கான தேசிய அமைப்பு திட்டம் தொடர்பில் நாடளாவிய ரீதியில் பிரதேச செயலாளர்கள் ஊடாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் பயனாக மேற்படி கொடுப்பனவைப் பெறுவதற்கென 9ஆயிரத்து 200 குடும்பத் தலைவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இதில் முதற்கட்ட நடவடிக்கையாக 400 குடும்பங்களுக்கு 3 ஆயிரம் ரூபா மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஏ-1)

# இலங்கைத் தீவில் தற்பொழுது இன அழிப்பே இடம் பெறுகிறது

## விடுதலைப்புலிகளின் மனித உரிமைப் பேச்சாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இலங்கைத்தீவில் தற்போது இடம் பெற்றுவருவது மனிதவதை , மனிதாபிமான சட்ட மீறல்கள் என்பவற்றிற்கும் அப்பால் ,இன அழிப்புக் கூறுகளைக் கொண்டுள்ளது என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான விவகாரங்களுக்கான பேச்சாளர் திருமதி செல்வி தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகளுக்கான மனித உரிமைகள் அமைப்பின் 4ஆவது கூட்டத்தொடர்,தமிழீழத் தாயகப் பகுதிகளில் இடம்பெறும் பெரும் மனிதவதை மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பாக தீவிர கவனத்தைச் செலுத்தி தாக்கமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்களை கண்டிப்பதற்கும் விசாரணைக்கு உட்படுத்துவதற்கும் அனைத்துலக மனித உரிமைகள் பொறிமுறை முன்வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மனித உரிமைகள் அமைப்பின் 2 ஆவது கூட்டத் தொடரில் இது தொடர்பான விவாதங்கள் ஆரம்பமாகியது. என்பதை சுட்டிக்காட்டிய அவர் அனைத்துலக சமூகத்தின் மனித உரிமைகள் கரிசனைகள் தொடர்பான பிரகடனங்களில் மக்கள் நம்பிக்கைவைக்க வேண்டுமாயின் தாக்கமுள்ள நடவடிக்கைகள் இப்போது மிக அவசியமாகின்றது என்று கூறினார்.

தமிழீழ செயற்பாடு நாட்டின் நிர்வாகப் பகுதிகளில் பொது மக்களிற்கு எதிரான படுகொலைகள் காணாமல் போதல் ,சித்திரவதைகள் என்பன இடம்பெறுவதில்லை. கடும்போக்கு ஆங்கில ஊடகங்கள் உட்பட பல தரப்பு பத்திரிகைகளும் சுதந்திரமாக இங்கு விநியோகிக்கப்படுகின்றன. இராணுவ நலன்சார் பகுதிகள் தவிர்ந்த பிற பகுதிகளுக்கு ஊடகவியலாளர்கள் செய்திகளை திரட்டிட அனுமதிக்கப்படுகின்றனர் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

விமானத் தாக்குதல்கள் ஊடுருவல் அணிகளின் கிளைமோர்த் தாக்குதல்களே இப் பகுதிகளில் வாழும் மக்களின் அன்றாட மனித சிக்கல் என அவர் விபரித்தார்.

தமிழ் மக்களின் விடுதலைப் போர் மனித உரிமைகள் தொடர்பான மேன்மையான அடித்தளத்திலேயே கட்டப்பட்டது. என்று கடந்த அனைத்துலக மனித உரிமைகள் நாள் செய் தியில் விடுதலைப்புலிகள் தெரிவித்திருந்தமையை திருமதி செல்வி இங்கு மீள வலியுறுத்தியுள்ளார். (ச-5)


## கண்ணீர் அஞ்சலி

எமது தீவக கல்வி வலயத்தின் உத்தியோகஸ்தர்

செல்வி ந.சிவகுமாரியின் தந்தை

நாகமுத்து நவரத்தினம் அவர்கள்

05.03.2007 அன்று காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கிறோம்.

நலன்புரிக் கழகம்,

தீவக வலயக் கல்வி அலுவலகம்.

(805)

## WANTED TEACHERS TO TEACH ENGLISH

We want part time teachers to teach English Grammar, Reading, Writing, Oral, Listening, Communication, Translation, Business correspondence, Presentation of Project work, Introduction to Literature, etc. Please apply with the Curriculum vitae before 20.03.2007. Branch Executive Officer, SLRCS, Jaffna Branch, 73, Kandy Road, Jaffna.

(C/640)


## கிணற்றிலிருந்து மாணவியின் சடலம் மீட்பு

மகாஜனாக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள வயற்கிணறு ஒன்றிலிருந்து யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட முதலாம் வருட மாணவி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அளவெட்டி அளுக்குச்சந்தியை சேர்ந்த முருகையா மயூரா (வயது 22) என்ற மாணவியின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் பதில் நீதிவான் வசந்தசேனன் சடலத்தை பிரேதபரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு தெல்லிப்பழை பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## இளைஞனின் சடலம் அடையாளம் காணப்பட்டது

ஏழாலை மயிலங்காட்டில கடந்த 5ஆம் திகதி வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட இளைஞனின் சடலம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்து உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.சடலமாக மீட்கப்பட்டவர் சுன்னாகம் புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த துரைராஜா சசிதரன் (வயது 26) என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

குறித்த இளைஞன்கடந்த 4 ஆம் திகதி இரவு அவர் வீட்டுக்குச் சென்ற ஆயுததாரிகளால் கடத்தப்பட்டதாக தெரியவருகிறது. இளைஞனின் சடலத்தை உற வினர்களிடம் ஒப்படைக்குமாறு மல்லாகம் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## மாகாண மட்ட போட்டிக்கு 98 மாணவர்கள் தெரிவு

திருகோணமலையில் நடைபெறவுள்ள மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டியில் யாழ்.மாவட்டத்திலிருந்து 98 மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

இப் போட்டியில் கலந்து கொள்வது தொடர்பாக வடக்கு மாகாண செயலாளரினால் சுற்று நிருபம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் அரச அதிபரின் உதவியுடன் தமிழ்தினப் போட்டிக்கு மாணவர்களைஅனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ச-3)

## ஆண்டு விழாவும் பரிசளிப்பும்

நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப்பாடசாலையின் 5ஆவது ஆண்டுநிறைவு விழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும். அறநெறிப் பாடசாலையின் தலைவர் சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை தலைவர் கலாநிதி மா.வேதநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். (ச)


## வீடு வாடகைக்கு

இலக்கம் 120,3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொலைபேசி உள்ளிட்ட சகல வசதிகளும் கொண்ட மாடிவீடு வாடகைக்கு உண்டு. வெளிநாட்டு ,உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலதிக தொடர்பு வலம்புரி நாளிதழ், யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 222 3378, 222 7644

(C-639)

## வீடு வாடகைக்கு

தென்னை,மா முதலிய பயன்தரு மரங்கள் ,கிணறு ,மின்சார வசதி முதலியவற்றுடன் நல்ல சுற்றாடலில் இல.75 (பழைய இலக்கம்) பருத்தித்துறை றோட், ஆனைப்பந்தியில் மூன்று அறைகள், சமையலறை வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

விபரங்களுக்கு.

0776035413, 4590942 ஆகிய தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நா.பாலசுப்பிரமணியம்
58,அரச வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(804)


# கடல் அட்டைகளை கடத்த முயன்ற நால்வர் தமிழகத்தில் கைது!

இந்தியாவின் தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு மருந்துப் பொருளாகப் பயன்படுத்தப்படும் கடல் அட்டைகள் மற்றும் நட்சத்திர மீன்களை கடத்த முயன்ற குற்றச்சாட்டில் மேலும் நான்குபேர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தியக் கடலில் பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள கடல் அட்டைகள்;நட்சத்திர மீன்கள் உள்ளிட்டவை பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவை இலங்கை வழியாக வெளிநாடுகளுக்கு கடத்தப்படவிருப்பதாகவும் தமிழக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் மூலம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே இலங்கைக்கு கடத்திச் செல்லும் நோக்கில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் ஒரு கோடி ரூபா மதிப்புள்ள நட்சத்திர மீன்கள்,கடலட்டைகள் படகுகளுடன் கைப்பற்றப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

## அமாவாசை தினம்

சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் அமாவாசை தினம் (எதிர்வரும் 18 ஆம் திகதி) அன்று அபிராமி அந்தாதி முற்றோதல் நடை பெறவுள்ளது. சகல தோசநிவாரணம் பெற்று நாட்டிற்கு சுபீட்சம் வேண்டி இந்த நிகழ்வு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. (ஏ-102)


## Jaffna College Institute of Technology

Vaddukoddai, Jaffna, Sri Lanka

**Certificate in Electrical & Electronics**

(மின் இலத்திரனியல் சான்றிதழ் பாடநெறி)

*(Duration : 6 months - முழுநேரம்)*

Medium: English (தமிழ்மொழி மூல விளக்கங்களுடன் கூடியது)

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொழில்நுட்பவியலாளர்களாக பணியாற்றவும், இத்துறையில் அறிவைப் பெற்றுக்கொள்ள விரும்புவோருக்கும் உகந்த பாடநெறி.

விண்ணப்பப்படிவங்களை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*ஆரம்பம் :- 20.03.2007*

*தொடர்புகளுக்கு,*

Director
Jaffna College Institute of Technology,
Vaddukoddai.

T.Phone:- 0602213139 E.mail:- jc it@sltnet.lk

(C/642)

விஞ்ஞானபீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## அறிவித்தல்

**விஞ்ஞானத்தில் முதலாம் / இரண்டாம் / மூன்றாம் தேர்வு (முதலாம் /இரண்டாம் அரையாண்டு) 2006 மீள் பரீட்சை**

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தினது மேற்குறிப்பிட்ட மீள் பரீட்சைகள் யாவும் (இரு அரையாண்டு பரீட்சைகள்) 03.04.2007 தொடக்கம் 05.05.2007 வரையிலான காலப்பகுதியில் நடைபெறவுள்ளன. மீள் பரீட்சார்த்திகள் தமது பரீட்சை அனுமதி விண்ணப்பப்படிவத்தினை உரிய கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டுடன் 23.03.2007 ஆம் திகதிக்கு முன்னதாக விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பரீட்சை அனுமதி விண்ணப்பப்படிவங்களை விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்தினை மேற்கண்ட திகதிக்கு முன் சமர்ப்பிக்க முடியாதவர்கள் தொலைநகலின் (Fax) ஊடாக (தொலைநகல் இல. 021-222 2685) கீழ்க்காணும் விபரங்களை சமர்ப்பிக்குமாறும் மீள் பரீட்சைக்கான உரிய கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை பரீட்சை எடுப்பதற்கு முன் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1. முழுப் பெயர் :-
2. பதிவிலக்கம் :-
3. சுட்டெண் :-
4. விண்ணப்பிக்கும் பாட அலகுகள் (Course Units)
5. தேசிய அடையாள அட்டை இலக்கம்

மேலதிக விபரங்களுக்கு விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசி இல.021-222 2685

*பதிவாளர்*

*யாழ். பல்கலைக்கழகம்*

(C/644)

முன் எப்பொழுதையும் விட உலகம் இப்போது நெருங்கிய பிணைப்புக்கொண்டிருக்கிறது. சட்ட நியாயத்தின்படி தகராறுகள் தீர்வதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

–டாக்டர் இராதாகிருஷ்ணன்

# வலம்புரி

## இந்தியாவை சமாளிக்கும் இலங்கையின் நாடகம்

இலங்கை கடற்பகுதியில் தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதி அட்டை வழங்க இலங்கை அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

தமிழக மீனவர்கள் மீது கடந்த காலங்களில் இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியதும்,அதில் தமிழக மீனவர்கள் பலியானதும் தெரிந்ததே.

இச் சம்பவம் தமிழகத்தில் பெரும் பரபரப்பையும், குழப்ப நிலையையும் ஏற்படுத்தியிருந்தது. இந் நிலையில் தமிழக முதல்வர் மு.கருணாநிதி, பிரதமர் மன்மோகன் சிங்குடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கியிருந்தார்.

இதனையடுத்து இந்திய மத்திய அரசு இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு தமிழக மீனவர்களின் படுகொலை தொடர்பில் தனது அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவித்திருந்தது.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகள் இலங்கை அரசுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என உணர்ந்து கொண்ட அரசு தனக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை தடுப்பதற்கும், இந்திய மத்திய அரசை சமாளிப்பதற்குமாக இலங்கை கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு அனுமதி அட்டை வழங்குவதாக கூறிக்கொண்டது.

இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு தமிழக மீனவர்களுக்கு அனுமதி அட்டை வழங்கப்படுமென இலங்கை அரசு கூறிக்கொள்வதும், அதனை இந்திய அரசும்,தமிழக அரசும் ஏற்றுக் கொள்வதும் தமிழக மீனவர்களே தவறு விட்டனர் என்பதை ஒத்துக்கொள்வது போல ஆகும்.

அதாவது, தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித்தது போலவும், அதனாலேயே அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டது போலவும் கதையை முடிக்கும் வரிசையில், இத்தகைய தவறு இடம் பெறுவதைத் தடுப்பதற்காக இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு தமிழக மீனவர்களுக்கு அனுமதி அட்டை வழங்குவதாக இலங்கை அரசு கூறிக்கொள்கிறது. உண்மையில் இந்திய கடற்பரப்பில் வைத்தே தமிழக மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

இந் நிகழ்வு இலங்கை கடற்படையினால் அடிக்கடி அரங்கேற்றப்பட்டு வந்தது. இந் நிகழ்வு தமிழகத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்துமாக இருந்தால் அது ஈழத்தமிழர்களுக்கு சாதகமாக அமைந்துவிடும் என்ற அச்சத்திலேயே தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கான அனுமதி அட்டை நாடகம் அரங்கேற்றப்படுகின்றது.

இந்த உண்மையை மத்திய அரசும், தமிழக அரசும் ஒருபோதும் உணரப்போவதில்லை. எனினும் ஈழத்தமிழர்கள் மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கும்போது தமிழக மீனவர்கள் இலங்கை கடலில் மீன்பிடிக்க அனுமதிப்பதென்பது ஆராயப்படவேண்டிய விடயமே.

# விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு வழங்கும் அரசியல் கட்சிகள் மீது கடும் நடவடிக்கை

## தமிழகப் பொலிஸார் எச்சரிக்கை

(சென்னை)

விடுதலைப்புலிகளுக்கு நேரடியாகவோ,மறைமுகமாகவோ பணம் மற்றும் பொருள் உதவி செய்பவர்கள் மற்றும் சட்ட விரோதமாக ஆதரவு கொடுப்பவர்கள், எந்தவொரு அரசியல் கட்சி மற்றும் தனி இயக்கங்களைச் சேர்ந்தவர்களாயினும் அவர்கள் மீது பாரபட்சமின்றி சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக பொலிஸ் அத்தியட்சகர் டி.முகர்ஜி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆயுதங்களை கடத்தியது தொடர்பாக 16 இலங்கைத் தமிழர்கள் உட்பட 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் அண்மைக் காலமாக நிலவி வரும் பதற்றமான சூழ்நிலையில் தமிழக பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர். கடலோர மாவட்டங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்தியும, தமிழ் நாடு கடலோரப் பாதுகாப்பு குழுமம், இந்தியக் கடற்[illegible], கடலோரப் பாதுகாப்பு படை மற்றும் மத்திய உளவுப் பிரிவு ஆகியவற்றோடு ஒருங்கிணைந்து தமிழ் தீவிரவாதிகள் எவரும் தமிழகத்துக்குள் நுழைந்து சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடாவண்ணமும் கடுமையான நடவடிக்கை எடுத்து வருகின்றன.

விடுதலைப்புலிகளுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ வெடிபொருள்களோ அல்லது அவர்களுக்கு உதவி செய்பவர்களை தீவிரமாகக் கண்காணித்து கடுமையான நடவடிக்கைகளைமேற்கொள்ள அரசு, பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

இலங்கைக்கு இரும்பு பால்ரஸ் குண்டுகளை கடத்த விருந்ததாக இலங்கைத் தமிழர்கள் 16 பேர் உட்பட 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச–5)

# பாராளுமன்ற உரைகளை பிரசுரிப்பதற்கு விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்

## விமல் வீரவன்ச எம்.பி.வேண்டுகோள்

(கொழும்பு)

பாராளுமன்ற உரைகளை பிரசுரிப்பது மற்றும் ஒலிபரப்புவது தொடர்பாக கொள்கை ஒன்றை கடைப்பிடிப்பதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்குமாறு ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் கொழும்பு மாவட்ட எம்.பியுமான விமல் வீரவன்ச சபையில் கோரிக்கை விடுத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட எம்.பி.ஜயலத் ஜயவர்த்தன அவசர கால சட்ட விவாதத்தில் ஆற்றிய பதில் உரையை ஒலிபரப்பாமல் அவர் மீது அவதூறு தெரிவிக்கும் அமைச்சர் ஹேம குமார நாணயக்காராவின் உரையை மாத்திரம் அரச இலத்திரனியல் ஊடகம் ஒன்று ஒலிபரப்பு செய்தமை தொடர்பான சர்ச்சை இடம் பெற்றுக்கொண்டிருந்தபோது கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரச ஊடகங்கள் அமைச்சர்களினதும் அரசுக்கு சார்பானவர்களினதும் செய்திகளையே வெளியிடுகின்றனர். சில தனியார் ஊடகங்கள் தங்களுக்கு சார்பான விடயங்களை மாத்திரமே வெளியிடுகின்றன.

ஆகவே பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் நிகழ்த்துகின்ற உரைகளை பிரசுரிப்பது மற்றும் ஒலிபரப்புவது போன்ற விடயத்தில் கொள்கை ஒன்றை கடைப்பிடிப்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று கூறி விமல் வீரவன்ச எம்.பி.பாராளுமன்ற உரைகளை வெளியிடும் விடயத்தில் ஊடகங்களுக்கு அறிவுறுத்தல் விடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

அப்போது கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரச தொலைக்காட்சிகளில் சமமான முறையில் பாராளுமன்ற உரைகளை வெளியிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கூறினார்.

அதேவேளை பாராளுமன்ற உரைகளை வெளியிடுவதில் ஊடகங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டிய அவசியம் பற்றியும் விளக்கமளித்தார். (ஏ–5)

# தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்

## ஜயலத் ஜயவர்த்தன எம்.பி. வேண்டுகோள்

(கொழும்பு)

அநீதிகளுக்கு எதிராக சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட எம்.பி.ஜயலத் ஜயவர்த்தன சபையில் தெரிவித்தார்.படுகொலை செய்யப்பட்ட ரவிராஜ் எம்.பியின் அனுதாப பிரேரணையில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் கூறியதாவது, இந்த அராசாங்கத்தினால் இனப்பிரச்சினைக்கான தீர்வு எதனையும் முன்வைக்க முடியாது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அடிப்படைக் கொள்கைக்கே மாறானவர்கள் இந்த அரசில் அங்கம் வகிக்கும் போது தீர்வு யோசனைகளை எவ்வாறு முன்வைக்க முடியும்.

நாட்டில் யுத்த நிலைமை ஏற்பட்டுள்ளது. மக்கள் கடத்தப்படுகின்றனர். படுகொலை செய்யப்படுகின்றனர். ரவிராஜ் இவற்றையெல்லாம் எதிர்த்து வந்தார். அரசியல் தீர்வு தொடர்பாக நாம் உண்மையாக நடந்து கொள்கிறோமா? ஐ.தே.க., அரசுக்கு முழுமையான ஆதரவினை வழங்கிவருகின்றது. அரசாங்கத்துக்கு புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் ஐ.தே.க.ஆதரவு வழங்கியது. ஆனால் அரசாங்கம் 18 எம்.பிக்களை எடுத்துக்கொண்டதன் மூலம் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறியது.

அரசாங்கம் ஐ.தே.கவுக்கு எந்த வகையில் துரோகம் இழைத்தாலும் அரசு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை பாராளுமன்றத்தில் கொண்டு வந்தால் நாங்கள் முழுமையான ஆதரவினை வழங்குவோம் என்பதனை பொறுப்புடன் கூறுகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளது. அவர்களுக்கு அனைத்துப் பாதுகாப்பையும் வழங்க வேண்டியது அரசினதும் பாராளுமன்றத்தினதும் கடமையாகும். எனவே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் எம்.பிக்களுக்கு பாதுகாப்பை வழங்குமாறு வலியுறுத்துகின்றோம்.

ரவிராஜ் கொலை வரிசையில் ஏனைய எம்.பிக்கள் கொலை செய்யப்பட இடமளிக்கப்படவேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றோம். கொலை செய்யப்பட்ட ரவிராஜின் குடும்பத்திற்கு பணத்தைக் கொடுக்கலாம் ஆனால் பாதுகாப்புச் செயலாளரால், பொலிஸ்மா அதிபரால் அவரின் உயிரை திருப்பிக் கொடுக்க முடியுமா? எம்.பி.மார்களைக் கொலை செய்து மக்கள் கருத்துக்களை முடக்க வேண்டாம் என்று கோருகின்றோம். நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். இனப் பிரச்சினைத் தீர்வுக்கான அரசியல் தீர்வை அரசாங்கம் உடனடியாக முன்வைக்க வேண்டும் என்றார். (ச–5)

# வடக்கு–கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களும் தேச நிர்மாண அமைச்சின் கீழ் செயற்படும்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள 8 மாவட்டங்களும் 5 தேசநிர்மாண அமைச்சுக்களின் கீழும் கொண்டுவரப்பட்டுள்ளன. தேச நிர்மாண அமைச்சின் அமைச்சு பொறுப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வசம் உள்ளது.

சமுர்த்தி 100 குளங்கள் புனரமைத்தல் ,கடற்றொழில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, கிராமிய வீதிகள் மற்றும் சுகாதார அபிவிருத்தி உள்ளிட்ட கிராமிய அபிவிருத்தி ஆகிய திட்டங்களும் தேச நிர்மாண அமைச்சின் கீழேயே கொண்டுவரப்பட்டுள்ளன.

இவற்றுக்கு அமைச்சரவை அந்தஸ்து ஆற்ற 5பேர் அமைச்சர்களான நியமிக்கப்பட்டுள்ளனர். மொனறாகலை , பதுளை,இரத்தினபுரி ,நுவரெலியா,மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கு பொறுப்பாக ஜகத் புஸ்பகுமார நியமிக்கப்பட்டுள்ளார்.

டி.எம்.தஸநாயக்காவின் கீழ் புத்தளம் ,குருநாகல்,கேகாலை மன்னார்,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அநுராதபுரம்,பொலநறுவை ,மாத்தளை , கண்டி,வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு பொறுப்பான அமைச்சராக எஸ்.எம்.சந்திரசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

றோகித போகொல்லாகம கொழும்பு, கம்பஹா ,களுத்துறை,அம்பாறை,யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கான அமைச்சராக பதவி ஏற்றுள்ளார்.

வீரக்கோனின் பொறுப்பில் காலி,மாத்தறை,அம்பாந்தோட்டை,திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தேச நிர்மாண அமைச்சின் பணிகளுக்காக இந்த வருடத்தில் 770 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதேவேளை சமுர்த்தி கொடுப்பனவு பெறுபவர்களின் தொகை எதிர்வரும் மே மாதம் தொடக்கம் 30 சதவீதத்தினால் குறைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

## தமிழ்மொழி மூல மாணவர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்

இலங்கைச் சட்டக் கல்லூரிக்குத் தமிழ்மொழி மூல மாணவர்களின் அனுமதியில் நீதிவழங்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தி வெள்ளவத்தையில் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளது.

இலங்கைச் சட்டக் கல்லூரிக்குத் தமிழ்மொழி மூலமான மாணவர்களின் அனுமதி தொடர்ச்சியாகக் குறைவடைவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் எதிர்காலத்தில் தமிழ்மொழி மூலமான சட்டவியலாளர்களின் எண்ணிக்கை குறைவடையும் அபாயம் உள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-3)

## கிழக்கிற்கான விசேட பரீட்சை நேற்று ஆரம்பமாகியது

கிழக்கில் கடந்த ஆண்டின் நடுப்பகுதியில் இடம்பெற்ற மோதல்களால் இடம் பெயர்ந்து கல்வியில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண சிறப்புப் பரீட்சை நேற்று ஆரம்பமாகியுள்ளது. திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பல மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள அகதிகளுக்கான முகாம்களில் தற்போது தங்கியுள்ள பல மாணவர்களும் இந்தப் பரீட்சையில் சமுகமளித்துள்ளனர்.

இடம்பெயர்வுகள் காரணமாக கடந்த டிசம்பர் மாதத்தில் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போன மாணவர்களே தற்போது இந்தச் சிறப்புப் பரீட்சையை எழுதுகின்றார்கள். அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளால் சில மாணவர்கள் கடத்தப்பட்டதால் சில பாடங்களை எழுதாத விநாயகபுரத்தைச் சேர்ந்த 102 மாணவர்களும் கூட இந்தப் பரீட்சைக்கு தோற்றியுள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர். (ச)

## ஜனாதிபதி...

கூட்டத்தில் மாவட்ட அதிகார சபைத் தலைவர் பதவியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக விலக்கப்பட்டதுடன் தலைவராக ஜெயந்த சமரவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான தொடர்பு மற்றும் தனியார் மயமாக்கல் திட்டங்கள் இருக்கும் வரை மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஜே.வி.பி. ஒருபோதும் செயற்படாது என ஜே.வி.பி. தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-3)

## புதிய அரசாங்கம்...

ஏற்படுத்தி அதனை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல பாரிய வேலைத் திட்டம் ஒன்று அவசியம். அந்த வகையில் புதிய அரசாங்கம் ஒன்றை உருவாக்க அதனை விரைவில் அமுல்படுத்தவுள்ளதாக அவர் கூறினார்.

எனினும் அவ் அரசாங்கத்தை உருவாக்கும் விதம் குறித்து எதனையும் வெளிப்படுத்தமுடியாதென அவர் கூறினார். இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவருக்கு சர்வதிகாரத் தீர்மானங்களை எடுக்கும் உரிமை இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

உலகில் பாரிய அமைச்சரவை ஒன்றின் மூலம் இந் நாடு நிர்வகிக்கப்படுவதாகவும் அவர் கூறினார். (ச-3)

## வெலிக்கடைச்...

வருவதில் பெரும் இடர்பாடுகளும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களும் இருப்பதை உண்ணாவிரதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமது கோரிக்கைகள்தொடர்பாக நீதியமைச்சரும் சட்டமா அதிபரும் நேரில் வந்து உறுதிமொழி வழங்கினால் மட்டுமே தாம் தமது போராட்டத்தைக் கைவிடுவோமென அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இத் தகவல்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளார். (ச-5)

## மட்டக்களப்...

தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் மட்டக்களப்பின் நகர், வவுணதீவு, செங்கலடி, முறக்கொட்டாஞ்சேனை, கிரான் ஆகிய பகுதிகளிலிருந்து மேற்கொள்ளும் பீரங்கித் தாக்குதல்களால் கொக்கட்டிச்சோலைப் பகுதிகளிலிருந்து பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இத்தாக்குதல் பொதுமக்களின் சொத்துக்களுக்கும் விளை நிலங்களுக்கும் பெருஞ்சேதத்தை விளைவித்துள்ளது. விடுதலைப் புலிகளுடனான மோதல்கள் என்ற போர்வையில் பொதுமக்கள் மீது திட்டமிட்டுத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. சர்வதேச சமூகம் கொழும்பு மீது அழுத்தங்களைப் பிரயோகித்து இதனை நிறுத்த முன்வர வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (எ-1)

## மட்டக்களப்பில்...

யுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆனால் மக்கள் பெருமளவில் இடம்பெயர்வதற்குக் காரணமாகக் கூறப்படும் இராணுவ நடவடிக்கைகளைக் குறித்துப் பாதுகாப்பு அமைச்சகத்தின் கவனத்திற்குத் தான் கொண்டு வந்துள்ளதாகவும் ஆனால் இது குறித்து மேலதிகமாக தன்னால் எதுவும் செய்ய முடியாது என்றும் அவர் தெரிவித்தார். (ச)

## தலைவர் பிரபாவின் மகன்...

இந்தப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது என இலங்கை தேசிய புலனாய்வுத்துறை அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

இந்தப் பிரிவின் மூலம் செய்மதிப் படங்கள் கணனியில் சேகரிக்கப்படும் தகவல்கள், ஏனைய கணனிகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் என்பவற்றை ஆராய முடியும்.

தகவல் தொழில்நுட்பப் பிரிவில் ஆய்வு மையமும் உள்ளது. இது விமான எதிர்ப்பு ஏவுகணை தொழில்நுட்பத்தைக் கொண்டிருப்பதுடன் விமானத் தாக்குதல் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளக் கூடியது என மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் முன்னரும் நவீன தொழில் நுட்பங்களைப் போர்களத்தில் பயன்படுத்திய போதும் அதற்குத் தனியான பிரிவைக் கொண்டிருக்கவில்லை.

போர் நிறுத்த காலத்தில் அவர்கள் விமான எதிர்ப்புக் கருவிகள், நவீன தொலைத் தொடர்பு கருவிகள், ஓடியோ, வீடியோ ஒலிப்பதிவுக் கருவிகள் போன்ற நவீன உபகரணங்களைக் கொள்வனவு செய்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் இந்த பிரிவு, படையினருக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் என இலங்கைப் புலனாய்வுத் துறை அரசாங்கத்தை எச்சரித்துள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## மட்டக்களப்பில் நேற்று...

படையினருக்கு எதிராக விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அத்துடன் உன்னிச்சைப் பகுதியில் படையினர் மேற்கொண்ட நகர்வு ஒன்றும் விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஆயினும் படையினர் தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர். புளுக்குனாவை, மகாஓயாச்சந்தி, வாழைச்சேனை கடதாசி ஆலை, தம்பிட்டி, வெபர் மைதானம் ஆகியவற்றில் இருந்து படையினர் ஆட்லறித் தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இதனைவிட சத்துருக்கொண்டான், கல்லடி, ஆரைப்பற்று, விமான நிலையம் ஆகியவற்றில் இருந்து படையினர் பல்குழல் எறிகணைத் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

படுவான்கரையை ஆக்கிரமிக்கும் நோக்கில் பல புதியமுனைகளைத் திறந்து முன்னகர்வு முயற்சிகளை படையினர் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர் என விடுதலைப்புலிகளின் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

## அரசிற்கும் விடுதலைப்...

தாம் உட்பட அரசாங்கத் தரப்பினர் நாட்டினைக் காட்டிக் கொடுக்கிறது அதனை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதாக புத்திஜீவிகள் உள்ளிட்டவர்களுடனான நேற்றைய விசேட சந்திப்பின்போது ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் நாட்டின்சகல அபிவிருத்தி நடவடிக்கைகளும் முன்னெடுத்துச் செல்லப்படும் என அவர் கூறியுள்ளார்.

ஒரு சிலர் அரசாங்கத்தைத் தாழ்வுபடுத்தி அசௌகரியங்களுக்கு உள்ளாக்க முயல்வதாகவும் குற்றஞ்சுமத்தியுள்ள ஜனாதிபதி, அந்த சக்திகளை முறியடித்து நாட்டை முன்னோக்கி இட்டுச் செல்வோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் போதல் மற்றும் கைது செய்யப்பட்ட நபர்களின் மனித உரிமை மீறப்படுவதாகவும் அரசாங்கத்தின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதி மறுத்துள்ளார்.

தோல்வியடைந்த அரசியல்வாதிகளும் அரசியலில் ஓய்வு பெற்ற சிலரும் மீண்டும் துரிதமாக ஆட்சிக்கு வரும் நோக்கில் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை அரசாங்கத்தின் மீது முன்வைப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நிலவுகின்ற பயங்கரவாதச் செயற்பாடுகளிலிருந்து பொதுமக்களை மீட்டு அவர்களுக்கு ஜனநாயக உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பேன்.

அத்துடன் நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குச் சகலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றையும் விரைவில் முன்வைப்பேன் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெற்கு மற்றும் மத்தியஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பிரதான மற்றும் பிரதிச் செயலாளர் ஷ்ரீபன் மானிடம் தெரிவித்துள்ளார்.

வடக்குக்கிழக்குப் பிரதேசங்களில் தற்பொழுது முன்னெடுக்கப்படுகின்ற மனிதாபிமானப் பணிகள் தொடர்பாகவும் நாட்டில் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மற்றும் நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை தொடர்பாகவும் ஜனாதிபதி இந்தச் சந்திப்பின் போது எடுத்துக் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக நாட்டிலிருக்கின்ற அரசியல் கட்சிகள் கொண்டிருக்கின்ற நிலைப்பாடுகளை கருத்திற்கொண்டு தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் நடவடிக்கைகள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது.

அதேபோல இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யோசனைகளை சர்வகட்சி ஆலோசனைக் குழுவிடம் கூடிய விரைவில் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ச-3,5)


## பாதுகாப்பு உத்தியோகஸ்தர் தேவை

பாதுகாப்பு உத்தியோகஸ்தராகக் கடமையாற்றுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிப்போர் 35 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். தகுதியுடையோர் அலுவலக நேரத்தில் நேரில் வரவும்

இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாக உத்தியோகஸ்தர்
வலம்புரி


## மரண அறிவித்தல்



### சங்கரப்பிள்ளை இரத்தினம்

[க.கு.சங்கரப்பிள்ளை வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்]

காரைநகர் மருதடிப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலுப்பிள்ளை சங்கரப்பிள்ளை இரத்தினம் (க.கு.சங்கரப்பிள்ளை வர்த்தக ஸ்தாபன உரிமையாளரும் பிரபல வர்த்தகர் யாழ்ப்பாணம்) நேற்று முன்தினம் (09.03.2007) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும், சறோஜினிதேவி, தனலட்சுமி, மகேஸ்வரி, கமலாதேவி (கனடா), நகுலாதேவி (கனடா), விக்னேஸ்வரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற Dr.செல்வரத்தினம் (மனோவைத்திய நிபுணர்), கெங்காதரன் (ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தர்), சிவபாதவிருதையர் (ஓய்வு பெற்ற கணித ஆசிரியர்), இராஜேந்திரம் (கனடா), அமிர்தலிங்கம் (கனடா), அனுசா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும்,

காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான உறுவான்வலை நாகமுத்து - அமராவதி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரம், லட்சுமி, கணபதிப்பிள்ளை, ஆறுமுகம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

காலஞ்சென்றவர்களான கந்தசாமி, நடராஜா மற்றும் நவரெட்ணம், சுந்தரலிங்கம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சந்திரிகா, சந்திரலதா , சிவபாலன், சிவகௌரி, சிவகாந்தன், கிருஷ்ணவேணி, நிஷாந்தன், கஜப்பிரியன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மகிந்த மலர்சாலையில் 12.03.2007 திங்கட்கிழமை முற்பகல் 9 மணியளவில் நடைபெற்று கல்கிசை பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மருதடிப் பிள்ளையார்
கோவில் அருகாமை,
சம்பந்தர்கண்டி,
காரைநகர்.

தகவல்;
இ.நாகம்மா
(மனைவி)

(C/அ/635)

## அறிவித்தல்

### விஞ்ஞானபீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### 2005/2006 கல்வியாண்டு - புதிய அனுமதிகள்

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சையின் அடிப்படையில் 2005/2006 கல்வியாண்டிற்கு விஞ்ஞான பீடத்திற்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் 22.03.2007 வியாழக்கிழமை ஆரம்பமாகும். அன்று மு.ப.9.30 மணிக்கு பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் புதிய மாணவர் வரவேற்பும், அறிமுக நிகழ்வுகளும் இடம்பெறும்.

அடிப்படைக் கற்கை நெறிகளாகிய கணனிப் பாடநெறியும், ஆங்கிலப் பாடநெறியும் 23.03.2007 தொடக்கம் 08.04.2007 வரை நடாத்தப்படும். யாழ். பல்கலைக்கழகத்தில் 2005/2006 கல்வியாண்டிற்கு தங்களைப் பதிவு செய்த மாணவர்கள் யாவரும் இந்த நிகழ்ச்சிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**விரிவுரைகள் 09.04.2007 திங்கட்கிழமை ஆரம்பமாகும்**

பதிவாளர்.
யாழ். பல்கலைக்கழகம்.
09.03.2007

(C/643)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.03.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.